# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2053 • டிசம்பர் 24 2022

Weekly E-paper • December 24, 2022


## எம்ஜிஆரைத் தெரியுமா உனக்கு?

சுப. வீரபாண்டியன்



### "TNPSC குரூப் 2/4" தமிழக அரசுக்கு வேண்டுகோள்!

வெற்றிச்செல்வன்

### இசையே தமிழிசையே!

தலையங்கம்

### Rule of the commoner

நூல் அறிமுகம் - மா.உதயகுமார்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2053 ● டிசம்பர் 24 2022

Weekly E-paper ● December 24, 2022


# எம்ஜிஆரைத் தெரியுமா உனக்கு?

**சுப. வீரபாண்டியன்**

“எம்ஜிஆரைத் தெரியுமா உனக்கு? எம்ஜிஆரைப் பார்த்திருக்கிறாயா நீ?” என்று ஓ.பி.எஸ், இ.பி.எஸ்ஸைப் பார்த்துக் கேட்ட பிறகுதான், ஓ..... இவர்களுக்குப் பெரியார், அண்ணாவை மட்டும்தான் தெரியாது என்று நினைத்துக் கொண்டிருந்தோம். எம்ஜிஆரையே தெரியாது என்பது இப்போது புரிகிறது.

இந்த இருவருடைய சண்டைக் காட்சிகள் உச்சத்தை அடைந்திருப்பதற்கு இவர்கள் இரண்டு பேருமே காரணம் இல்லை. ஆட்டுவிப்பவர்கள் பின்னால் இருக்கிறார்கள், நம் கண்ணுக்கு முன்னால் ஆடுகிறவர்கள் தெரிகிறார்கள்.

2024 ஆம் ஆண்டு தேர்தல் பணிகளைப் பா.ஜ.க எந்த திசையில் இருந்து தொடங்கி இருக்கிறது என்பது இப்போது புரிகிறது! இரண்டு பேரையும் மறுபடியும் சேர்த்து வைத்து, அதிமுக ஒரு பெரிய கட்சி என்பது போன்ற தோற்றத்தை ஏற்படுத்தி விடாமல், இருவரையும் உடைத்து அந்தக் கட்சியை முற்றிலுமாக ஒன்றுமில்லாமல் ஆக்கிவிட்டு, பிறகு இரண்டு பேரையுமே தன்னுடைய கட்டுப்பாட்டிற்குள், தன் கருணையை எதிர்பார்த்து நிற்கிறவர்களாக ஆக்கி விட வேண்டும் என்பதுதான் பாஜகவின் திட்டம்.

வரும் நாடாளுமன்றத் தேர்தலில், பாஜக தலைமையிலான கூட்டணியில், சில இடங்கள் ஈ.பி.எஸ் கட்சிக்கும், சில இடங்கள் ஓ.பி.எஸ் கட்சிக்கும் கொடுக்கப்படும் என்று கூறுகிறார்கள். அதிலும் ஓ.பி.எஸ் கட்சியினர் தாமரைச் சின்னத்திலேயே போட்டியிட வேண்டும் என்பது இன்னொரு நிபந்தனையாக இருக்கலாம் என்கின்றனர்.

இந்த இரண்டு அணிகளும் எப்படிப் போனால் நமக்கு என்ன என்று இருந்து விடலாம். ஆனால் இரண்டையும் அழித்து விட்டு, பாஜக அந்த இடத்திற்கு வர முயற்சி செய்வதைத் தமிழ்நாட்டு மக்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியாது!







பாஜக என்பது ஓர் அழிவு சக்தி. ஒற்றுமையாக இருக்கும் மக்களிடத்தில் மத வெறியையும், வேறுபாட்டையும் உருவாக்கி, மத மோதல்களுக்கு இடையில், தான் அதிகாரம் செலுத்த வேண்டும் என்பதே அவர்கள் திட்டம்.

அதிமுகவை அழிப்பது போல, திமுகவை அழித்து விட முடியாது என்பது அவர்களுக்குத் தெரியும். அதனால்தான் திமுகவின் நல்ல பெயரைக் கெடுப்பதற்கு எல்லா முயற்சிகளையும் அவர்கள் செய்யத் தொடங்கி இருக்கின்றனர்.

நாகர்கோவில், நீலகிரி, கோவை, தென் சென்னை போன்ற தொகுதிகளைக் குறி வைத்திருக்கும் அவர்கள், அந்தத் தொகுதிகளில் திமுகவின் சார்பில் போட்டியிடக் கூடிய வேட்பாளர்கள் யாராக இருக்கும் என்று ஊகம் செய்து, அந்த வேட்பாளர்களின் நற்பெயர்களைக் கெடுப்பதற்கான பணிகளை முதல் கட்டமாகத் தொடங்கி இருக்கின்றனர். இன்னும் பல திட்டங்கள் அவர்கள் கைவசம் இருக்கக்கூடும்.

2023 ஆம் ஆண்டு, நாடாளுமன்றத் தேர்தலுக்கான எல்லா விதமான உத்திகளோடும்தான் தொடங்கப் போகிறது! ஏறத்தாழ ஒன்றரை ஆண்டு காலம், பாஜக தன்னுடைய வஞ்சகம், சூழ்ச்சி, வன்முறை எல்லாவற்றையும் கட்டவிழ்த்து விடும்.

2024 தேர்தல் என்பது, யார் வெற்றி பெற வேண்டும் என்பதற்காக நடக்கவிருக்கும் தேர்தலே இல்லை. இனிமேல் இந்தியாவில் தேர்தல் என்ற ஒன்று நடக்குமா, நடக்காதா என்கிற கேள்விக்கான பதிலை முடிவு செய்வதுதான் வரவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தல்.

ஜெர்மன் தேசத்தின் மிகப்பெரும் சர்வாதிகாரியாக உருவெடுத்து, உலக அமைதிக்கே ஊறு விளைவித்த ஹிட்லர் கூட, தேர்தலில் வெற்றி பெற்றுத்தான் பதவிக்கு வந்தான் என்பதை மறந்து விடக்கூடாது! அந்தத் தேர்தலில் ஹிட்லருக்கு வாக்கு அளித்த ஜெர்மானிய மக்கள், பிறகு அடுத்து ஒரு தலைமுறைக்குத் தேர்தல் என்பதை அறியாதவர்களாக ஆகிவிட்டார்கள்.

இந்தியா இந்தியாவாக இருக்கப் போகிறதா அல்லது ஹிட்லரின் பாதையை ஏற்கப் போகிறதா என்பதை வரவிருக்கும் தேர்தல் முடிவு செய்யும்! ●

# “TNPSC – குரூப் 2/4 தேர்வு” தமிழக அரசுக்கு வேண்டுகோள்!

வெற்றிச்செல்வன்

தமிழ்நாடு அரசின் முக்கிய அங்கமாகப் பணியாற்றும் அரசு ஊழியர்கள் மற்றும் அலுவலர்களை தமிழ்நாடு அரசுப் பணிகள் தேர்வாணையம் (TNPSC) தேர்வு செய்கிறது. இதற்காக அவ்வாணையம் ஆண்டுதோறும் தேர்வுகள் நடத்தி, அவற்றில் தேர்ச்சி பெறுபவர்களைப் பணிநியமனம் செய்து வருகிறது. 2022 ஆம் ஆண்டு குரூப் 1, 2, 4 உள்ளிட்ட பணிகளுக்குத் தேர்வுகள் நடைபெற்றன. இந்நிலையில் 2023 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள தேர்வுக்கான அட்டவணையை (Annual planner) அண்மையில் தேர்வாணையம் வெளியிட்டது. அதில் குரூப் 2 மற்றும் 4 ஆகிய தேர்வுகள் குறித்த அறிவிப்புகளே இல்லை என்பது தேர்வுக்கு ஆயத்தமாகி வரும் இலட்சக்கணக்கான தேர்வர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

கடந்த அதிமுக ஆட்சியின் தவறான நிதி நிர்வாகத்தால், 2020 ஆம் ஆண்டு ஓய்வு பெறவிருந்த ஊழியர்களுக்கு ஓய்வூதியம் உள்ளிட்ட பணப்பலன்களை வழங்க அரசால் இயலவில்லை. எனவே அந்த ஆண்டு ஓய்வு பெற வேண்டியவர்களுக்கு ஓய்வு பெறும் வயது 58 வயதிலிருந்து 59 வயதாக உயர்த்தப்பட்டது. இது பிறகு 60 வயதாக்கப்பட்டது. அப்போதைக்குப் பிரச்சினையைத் தள்ளிப் போட்டு விட்டு தப்பித்துக் கொண்டது அதிமுக அரசு.

இந்த வயது நீட்டிப்பால், ஊழியர்கள் ஓய்வு பெறுவது தாமதமான நிலையில் காலிப்பணியிடங்கள் உருவாகாததால், தேர்வாணைய அறிவிப்பில் குரூப் 2/4 தேர்வுக்கான அறிவிப்புகள் இடம்பெறவில்லை என்று சொல்லப்படுகிறது.




2020 ஆம் ஆண்டு தொடங்கிய கொரோனா பெருந்தொற்றால், இரண்டு ஆண்டுகளாகத் தேர்வு நடைபெறவில்லை. இதனால் தேர்வுக்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்த மாணவர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர். தற்போது ஓராண்டாகத் தேர்வுகள் நடந்து கொண்டிருக்கும் சூழ்நிலையில், அடுத்த ஆண்டு குரூப் 2/4 தேர்வுகள் நடைபெற வாய்ப்பில்லை என்றால் அது மாணவர்களை மிகுந்த மனச்சோர்வுக்கு ஆளாக்கும்.

இந்த ஆண்டிலிருந்தே 60 வயதைத் தொட்ட அனைவரும் ஓய்வுபெற்று வரும் நிலையில், காலிப் பணியிடங்களும் அதிகரித்துக் கொண்டுள்ளன. எனவே அடுத்த ஆண்டு தேர்வுகளை நடத்துவது, காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கு ஏதுவாக இருக்கும். அதனால் மாணவர்களின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு தேர்வாணையம் முடிவெடுக்க வேண்டும்.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன், குரூப் 4 தேர்வினை 2023 ஆம் ஆண்டுக்குள் நடத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார். இளைஞர் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள திமுக இளைஞரணிச் செயலாளர் உதயநிதி, இதில் சிறப்புக் கவனம் செலுத்தி, தேர்வுகளை நடத்த ஆவன செய்வது இளைஞர்களின் வாழ்வில் நம்பிக்கைக் கீற்றினை ஒளிரச் செய்யும். ●



19.12.2022 அன்று பேரவையின் தலைமை அலுவலகத்தில் பேராசிரியர் அன்பழகனாரின் பிறந்தநாளை முன்னிட்டு அவரது படத்திற்கு மலர் தூவி மாலை அணிவிக்கப்பட்டது.

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## இசையே தமிழிசையே!

சென்னை ராஜா அண்ணாமலை மன்றம், தமிழ் இசைச் சங்கத்தின் 80 ஆம் ஆண்டு விழாவின் போது “எங்கும் தமிழ், எதிலும் தமிழ் ஆதல் வேண்டும். அந்த வரிசையில் இசையிலும் தமிழிசை செழிக்க வேண்டும்,” என்று தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேசியிருக்கிறார். சிறப்பு வாய்ந்தது அவரின் அன்றைய பேச்சு.

தமிழர்கள் மீது அந்நியர்கள் நடத்திய பண்பாட்டுப் போர்களினால் தமிழர்கள் இழந்ததில் ‘தமிழிசை’யும் ஒன்று.

குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் ஆகிய ஏழு தமிழிசைப் ‘பண்’களை, சட்சம், ரிஷபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிடாதம் அதாவது ச,ரி,க,ம,ப,த,நி என்று சுரங்கள் ஆக்கித் தமிழிசையை மொத்தமாக விழுங்கிக் கர்நாடக இசையாக மாற்றி விட்டார்கள் பார்ப்பனர்கள்.

சிலப்பதிகாரம் அரங்கேற்று காதை, மு.ஆபிரகாம் பண்டிதரின் ‘கருணாமிர்த சாகரம்’, விபுலானந்த அடிகளின் ‘யாழ் நூல்’, புலவர் புரட்சிதாசனின் ‘இசைத்தமிழ்’ போன்றவைகளால் இதனை அறியலாம்.

ஒருகாலத்தில் தமிழ் இசையை நீசப் பாட்டு, தீட்டுப் பாட்டு என்று கர்நாடகப் பாட்டுக்காரர்கள் சொன்ன போது, வெகுண்டெழுந்தவர் ஐயா பெரியார் அவர்கள்.

அவாள்களின் பாட்டு மேடைகளில் சூத்திரர்களை ஒதுக்கிய போது, பக்திமானான சீர்காழி கோவிந்தராஜனைப் பகுத்தறிவு மேடைகளில் பாட வைத்தவர் பெரியார்.

செட்டிநாட்டரசர் ராஜா சர். அண்ணாமலைச் செட்டியார் அவர்கள், தமிழிசையை உயர்த்திப் பிடிக்க தமிழிசைச் சங்கத்தைத் தோற்றுவித்த பின்னர் அதற்குத் துணையாய் இருந்தவர் பெரியாரும், திராவிட இயக்கமும்.

மார்கழி மாத உத்சவச் சுரங்களுக்கு நடுவே, தமிழிசையை ஓங்கிப் பாடும் அண்ணாமலை அரங்கத்தில் நின்று கொண்டு, “இந்த அரங்கம் இங்கே கம்பீரமாக நிற்கிறது என்றால், இது வெறும் கட்டடம் அல்ல, கலைச் சின்னமாக நின்று கொண்டு இருக்கிறது! இசைச்சின்னமாக நின்று கொண்டு இருக்கிறது! தமிழ் அடையாளமாக நின்று கொண்டு இருக்கிறது! இந்தக் கட்டடம்தான், தமிழிசையை, கோட்டை கட்டிக் காத்த அரங்கம்!” என்று சொல்கிறார் நம் முதல்வர்.

திராவிடத்தால் தமிழிசை வளர்கிறது, வரவேற்போம் நாமும்!




## கவியரங்கம்






21-12-2022 அன்று இனமானப் பேராசிரியர் நூற்றாண்டு நிறைவு விழாவையொட்டி திருவண்ணாமலை, அண்ணா சிலை அருகே திறந்த வெளியில் நடைபெற்ற சிறப்புக் கவியரங்கத்தில், கவியரங்கத் தலைவர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன்.

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்: எழில். இளங்கோவன்

உதவி ஆசிரியர்கள்:
உதயகுமார், வெற்றிச்செல்வன், சாரதாதேவி

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்
www.keetru.com, www.karunchattaibooks.com

மின் அஞ்சல்: karunchattai@gmail.com

டுவிட்டர்: suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு, ரங்கராஜபுரம், கோடம்பாக்கம், சென்னை - 600 024,தொலைபேசி: 044-2472 6408

# Rule of the commoner (சாமானியர்களின் ஆட்சி)

நூல் அறிமுகம்

மா.உதயகுமார்

"Great popular movements are not mere accidents of history. They are the outcome of the urge of the people for an assertion of the true nature of their corporate personality. Often humble and obscure at their source, they swell into oceanic proportions on their march towards their destination. Generally, these movements are noticed only when they reach their final crescendo. We then work back laboriously to trace their beginning."

- S.Vedaratnam, A Plea for Understanding: A Reply to the Critics of the Dravidian Progressive Federation


"மாபெரும் மக்கள் இயக்கங்கள் வரலாற்றின் வெறும் விபத்துகள் அல்ல. அவை, மக்கள் தங்கள் நிறுவன ஆளுமையின் உண்மைத் தன்மை மீது கொண்ட உறுதிப்பாட்டின் தூண்டுதலால் விளைந்தவை. பெரும்பாலும் அடக்கமாகவும் ஆரவாரமின்றியும் தோன்றும் அவ்வியக்கங்கள், தங்கள் இலக்கை நோக்கி அணிவகுத்துச் செல்லும் போது கடல் விகிதத்தில் பெருகுகின்றன. பொதுவாக, இவ்வியக்கங்கள் அவற்றின் உச்சத்தை எட்டும் போது மட்டுமே கவனிக்கப்படுகின்றன. அதன்பிறகு, அவற்றின் தொடக்கத்தைக் கண்டறிய நாம் கடினமாக உழைக்கிறோம்."

1951ஆம் ஆண்டு நடைபெற்ற திமுகவின் முதல் மாநில மாநாட்டில், கழகத்தின் மீதான விமர்சனங்களுக்குப் பதில் அளிக்கும் வகையில் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்ட துண்டறிக்கையில் இடம்பெற்ற வரிகள் இவை. இவ்வரிகளுக்கு ஏற்ப இன்று தமிழ்நாட்டில் உருவாகியிருக்கும் திராவிட இயக்க அரசியலின் அடித்தளமாய் அமைந்து ஆலமரமாய் உறுதியோடு நிற்கும் திமுக கழகத்தின் தோற்றம் குறித்தும், தமிழ்நாட்டில் உருவாக்கப்பட்டிருக்கும் அரசியல் குறித்தும் ஆய்வு செய்து, "Rule of the commoner" (சாமானியர்களின் ஆட்சி) என்கிற நூல் வெளியிடப்பட்டிருக்கிறது. அந்நூலில் இடம்பெற்றுள்ள தொடக்க வரிகளும் இதே வரிகள்தான்.

சிறந்த ஆய்வாளர்களான, விளங்கும், அம்பேத்கர் பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் பேராசிரியர் ராஜன் குறை கிருஷ்ணன், அசோகா பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் பேராசிரியர் ரவீந்திரன் ஸ்ரீராமச்சந்திரன், ஆய்வாளர் வி எம் எஸ் சுபகுணராஜன் ஆகியோர் இணைந்து இந்நூலை உருவாக்கி இருக்கிறார்கள்.

மூவருக்கும் உள்ள ஒரு ஒற்றுமை, மூவருமே 1960,70களில் தமிழ்நாட்டு அரசியலில் திமுகவின் எழுச்சி தொடங்கிய காலகட்டத்தில் வளர்ந்தவர்கள்.

இந்திய ஒன்றியம் குடியரசாக உருவானதற்குப் பின்பு, இந்தியாவில் தன்னந்தனியாக, உறுதியான மாநிலக் கட்சியாக உருவானது திராவிட முன்னேற்ற கழகம்.




காலங்காலமாக ஒடுக்கப்பட்டு, கல்வி மறுக்கப்பட்ட எளிய பின்னணியில் இருந்து வந்த சாமானியர்களால் உருவாக்கப்பட்ட இவ்வியக்கம் அதன் தொடக்கம் முதல் சந்தித்த விமர்சனங்கள், இடர்ப்பாடுகள், அரசியல் வன்மங்கள் ஆகியவற்றைக் கடந்து திமுக உருவாக்கிய சாமானியர்களின் ஆட்சியைப் பற்றிய ஆய்வாக இந்நூல் உருவாக்கப்பட்டு இருக்கிறது.

முதன்மைக் கூறாக இந்நூல் திமுகவின் அரசியலாக சொல்லப்படுவது, திராவிட உணர்வையும் தமிழ் உணர்வையும் இணைத்து திமுக உருவாக்கிய அரசியலின் கருப்பொருள் ஆரிய - திராவிட, பார்ப்பனர் - பார்ப்பனர் அல்லாதார் அரசியலே என்பதாகும்.

1949 இல் திமுக கழகம் தொடங்கிய காலம் முதல் 1967இல் சாமானியர்களின் ஆட்சியாக திமுகவின் ஆட்சி தமிழ் நாட்டில் மலர்ந்தது வரையிலான காலகட்டத்தில் உருவாகி, இன்று வரை நிலைபெற்றிருக்கும் வெகு மக்கள் அரசியல் இந்நூலில் ஆய்வு செய்யப்பட்டிருக்கிறது.

திமுகவின் மீது வைக்கப்பட்ட மூன்று முக்கியமான விமர்சனங்களுக்கு ஆய்வுப் பூர்வமான பதிலை இந்நூல் அளித்திருக்கிறது. அரசியல் முதிர்ச்சியில்லாத, தமிழ் இனவாத இளைஞர்களால் ஆட்சி நடத்த முடியாது என்றும், கல்வியறிவு இல்லாத, படிக்காத, நாகரிகம் குறைந்த இவர்கள் ஆட்சிக்கு வந்தால் நிர்வாகம் கெட்டுப் போய்விடும் என்றும், வார்த்தை ஜாலம் செய்து மக்களை ஏமாற்றுபவர்கள் என்றும், கூத்தாடிகளாக நாடகம் திரைப்படம் என்று இயங்கும் இவர்கள் அரசியலுக்குத் தகுதியற்றவர்கள் என்றும் அன்றைய காங்கிரசாரால் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. அதேபோல் இடதுசாரிகள், திமுக மார்க்சியத் தத்துவங்களைப் புறக்கணித்து முதலாளித்துவத்துக்கு ஆதரவாக செயல்படுகிறது என்றும், பட்டியல் சமூகத்தைச் சேர்ந்த சிலர், பார்ப்பனியத்தை எதிர்க்கிற பெயரில் இடைநிலை ஆதிக்க சாதிகளுக்கு அதிகாரத்தைப் பகிர்ந்து அளிப்பதே திமுகவின் அரசியல் என்றும் முன்வைத்த விமர்சனங்களுக்குத் திமுகவின் அடித்தட்டு மக்கள் நலனில் இருந்து தொடங்கும் அரசியல் செயல்பாடுகள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டு இந்நூலில் பதில் சொல்லப்பட்டிருக்கிறது.

திமுக முன்வைத்த சுய நிர்ணய உரிமையுடன் கூடிய திராவிடக் கூட்டமைப்பு பற்றியும் இதை வைத்து தமிழ்த் தேசியர்கள், திமுக திராவிடம் என்கிற பெயரில் தமிழர் உரிமைகளுக்கு எதிரானது என்று சொல்லும் விமர்சனங்களுக்கும் இந்நூலில் பதில் ஆய்வுப்பூர்வமான பதில்கள் சொல்லப்பட்டிருக்கின்றன.

சாமானியர்களின் கட்சியாகத் தோன்றி, ஆட்சியைப் பிடித்து, திராவிட இயக்க அரசியலை வெகுமக்கள் அரசியலாக்கியிருக்கும் திமுகவின் வரலாறு உலக அரசியல் வரலாற்றில் முதன்மை பெறுவதை எந்த முன்முடிவும் இன்றி இந்நூலைப் படிப்பவர்களால் விளங்கிக் கொள்ள முடியும். ●